12th July 1962]

திரு. இராம. அரங்கண்ணல் : அடையாருக்கு அருகிலே இருக்கும் ஊரூர் குப்பத்தில் எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு ஏதாவது கட்டிடம் கட்டுவதாக உத்தேசம் உண்டா?

கனம் திரு. வி. ராமையா : எம்.எல்.ஏ.-க்களுக்கான ஹாஸ்டல் கட்டவேண்டுமென்ற பிரச்னை தீவிரமாக பரிசீலனை செய்யப்பட்டு, கட்டிடம் கட்ட வேண்டுமென்ற முடிவும் எடுத்திருக்கிறோம். ஆனால், எந்த இடத்திலே கட்டுவது என்று இன்னும் இடம் தேர்ந்தெடுக்கப் படவில்லை.

ரிப்ரேக்டரி தொழிற்சாலை

*248 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

சிவகெங்கை ரிப்ரேக்டரி தொழிற்சாலை எப்போது ஏற்படுத் தப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN : The Refractory Factory, originally proposed to be set up at Sivaganga will now be set up at Vridhachalam. The factory is expected to start functioning from the middle of 1963.

திரு. கரு. சீமைச்சாமி : "இராமநாதபுரம் ஜில்லா—பத்தாண்டுச் சாதனைகள்" என்ற புத்தகத்தில், இத்தகைய ரிப்ராக்டரி தொழிற்சாலையை சிவகங்கையில் 25 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்த முடியும் என்று போட்டுவிட்டு, இப்பொழுது கைவிடப் படுவதன் நோக்கம் என்ன? எந்த அடிப்படையில் அங்கு இது அமைக்கப்படும் என்று இந்தப் புத்தகத்தில் பிரசுரிக்கப்பட்டது என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 1959-ம் வருஷம், நவம்பர் மாதம், 28-ந் தேதி அன்றிருந்த நிலைமையில், நமக்குக் கிடைத்த பரிசீலனை ரிபோர்ட் பிரகாரம், அங்கு போதிய அளவு ரிப்ரேக்டரி தொழிற்சாலை நடத்தக்கூடிய அளவுக்கு—களிமண் கிடைக்கும் என்ற நிலைமை இருந்தது. அதையொட்டி அங்கே ரிப்ராக்டரி ப்ளாண்ட் வைப்பதாக சர்க்கார் முடிவு செய்தார்கள். ஆனால், ஜியாலஜிஸ்டை அங்கே அனுப்பி, மேற்கொண்டு பரிசீலனை செய்ததில், அங்கு ரிப்ராக்டரி ப்ளாண்ட் வைக்கக்கூடிய அளவுக்குக் களி மண் கிடைக்கவில்லை என்று தெரியவந்தது. நெய்வேலியில் அந்தக் களிமண் கிடைக்கும் காரணத்தால் அந்த இடத்திற்கு அதை மாற்றியிருக்கிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி : சிவகங்கையில்தான் அந்த மண் வளம் இல்லையென்றால், அதற்குப் பக்கத்தில் மானாமதுரையிலாவது அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவது பற்றி அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தப் பக்கத்தில் ஏதாவது தொழிற்சாலை வைக்கவேண்டுமென்ற ஒரு நோக்கத்துடன்தான் அங்கு ஏதாவது செய்யலாமா என்று அரசாங்கம் ஆலோசனை

[12th July 1962

செய்து, இதையாவது அங்கே வைக்கமுடியும் என்று முடிவுக்கு வந்தோம். ஆனால், அங்கே போதிய அளவு களிமண்ணை கிடைக்கவில்லையென்றால், 25 லட்சம் ரூபாய் வரை அங்கே போட்டு விட்டு, கடைசியாக தொழிற்சாலையை வைத்து நடத்த முடிய வில்லை என்ற நிலைமையை உண்டாக்கக் கூடாது என்ற காரணத் திற்காக மாற்றிவிட்டோம். இருந்தாலும், அந்த இராமநாத புரம் கிழக்குப் பகுதியில் வேறு ஏதாவது தொழிற்சாலைகள் வைப் பதற்கான முயற்சிகளை சர்க்கார் எப்போதும் எடுத்துக்கொண்டே இருக்கிறது. கனம் அங்கத்தினருக்கு ஏதாவது ஆலோசனை இருந்தாலும், அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக் கிறேன்.

அத்தியாவசியப் பொருள்கள் (விலைக் கட்டுப்பாடு)

*249 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அத்தியாவசியமான பொருள்களின் விலைகளைக் கட்டுப் படுத்த குழு ஒன்று அமைக்க உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (அ) No, Sir.

(இ) Does not arise.

Tuticorin Port (development)

* 250 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the present stage of the scheme to develop Tuticorin into a major port; and

(*b*) the prospect for Sethusamudram Project?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The scheme for the development of the Tuticorin Port into a major port alongside harbour has been included in the Central Sector of the Third Five-Year Plan. The project wil be implemented by the Ministry of Transport, Government of India. They have taken steps to collect the data required for designing the harbour.

(*b*) The work of putting down trial bores along the alignment for the Sethusamudram Canal to collect data regarding the sub-soil strata has been completed. An estimate for the project based on the data now collected is being prepared by the Chief Engineer (General). Further action to process the project with the Government of India will be taken after the estimate for the project is in hand.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தூத்துக்குடி துறைமுக அபி விருத்தி வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டனவா ? இதுவரைக்கும் எவ்வளவு ரூபாய் அதற்குச் செலவழிக்கப்பட்டிருக்கும் ?